செ.வெ.எண் :665 நாள்: 12.10.2021

# பத்திரிக்கை செய்தி

**தஞ்சாவூர், அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகம்.**

**மார்ச் 2014 முதல் செப்டம்பர் 2018 வரையிலான மேல்நிலை தேர்வுகளின் அனைத்து பருவங்களுக்குறிய உரிமைக்கோரப்படாத தனித்தேர்வர்களது அசல் மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தல் குறித்து திரு.சி.தமிழரசன், உதவி இயக்குநர் அவர்களின் செய்திக் குறிப்பு**

மார்ச் 2014 முதல் செப்டம்பர் 2018 வரையிலான மேல்நிலை தேர்வுகளின் அனைத்து பருவங்களுக்குறிய உரிமைக்கோரப்படாத தனித்தேர்வர்களது மதிப்பெண் சான்றிதழ்களை கழிவுத்தாள்களாக மாற்றிடும் பொருட்டு அரசிதழில் அறிவிக்கை வெளியிட தலைமையலுவலகத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதால் இதுவே இறுதி வாய்ப்பு என்பதால் சம்பந்தப்பட்ட தனித்தேர்வர்கள் 31.12.2021 க்குள் தங்களது மதிப்பெண் சான்றிதழ்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் செப்டம்பர் 2018 பருவத்திற்கு பின் தேர்வெழுதிய பருவங்களுக்கான அசல் மதிப்பெண் சான்றுகளையும் பெற்றுக்கொள்ளலாம் என அறிவுறுத்தப்படுகிறது.

மேற்கண்ட தகவல்களை அரசுத்தேர்வுகள் உதவி இயக்குநர் அவர்கள் தெரிவித்தார்.

செய்திவெளியீடு : செய்தி -மக்கள் தொடர்பு அலுவலர், தஞ்சாவூர்.